## அந்நியர்களுக்கு வாடகைக்கு விடப்படும் கடை லைசென்ஸ்

# கண்களை மூடிக்கொண்டால் எப்படித் தீர்வு பிறக்கும்?

**கோலாலம்பூர், ஜூன் 4-**

**சில தரப்பினர் கண்களை மூடிக்கொண்டிருக்கும் வரையில் அந்நியப் பிரஜைகளுக்குக் கடை லைசென்சுகளும் அங்காடிக் கடைகளுக்கான லைசென்சுகளும் வாடகைக்கு விடப்படுவது ஒரு முடிவுக்கு வராது. இந்த விவகாரத்தில் சில தரப்பினர் கண்ணை மூடிக் கொண்டிருக்கும் வரையில் இப்பிரச்சினை தொடரத்தான் செய்யும்.**




இந்தச் செயல்களை மூடிமறைக்க ஊராட்சித்துறைக்குள் உள்ஆட்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்பதை நாங்கள் மறுக்க வில்லை என மலேசிய வணிகர்கள், அங்காடி வியாபாரிகளின் சம்மேளனத்தலைவர் டத்தோஸ்ரீ ரோஸ்லி சுலைமான் தெரிவித் தார். உள் ஆட்கள் இருக்கக்கூடும் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் நாங்கள் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. கோலாலம்பூர் மாநகர் மன்றம் உட்பட ஊராட்சித்துறை கடுமை யான நடவடிக்கை எடுத்தால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டிவிடலாம் என்று அவர் கூறினார்.

அலிபாபா எனப்படும் அந்நியர்களுக்குக் கடை லைசென்சு களை வாடகைக்கு விடுவது இன்னும் நீடிக்கிறது. இது பழைய பிரச்சினை. புதிய பிரச்சினை அல்ல. இதனை ஏன் தீர்க்க முடியவில்லை என்ற கேள்வி எழுகிறது.

நாடு முழுமையும் உள்ள ஊராட்சி மன்றங்களும் கோலாலம்பூர் மாநகர் மன்றமும் அதிகாரிகள் கண்டிப்பான முறையில் கடமையை நிறைவேற்றுவதை உறுதி செய்துகொள்ள வேண்டும். அவர்கள் சரியான முறையில் கடமையாற்று வதையும் உறுதிசெய்ய வேண்டும். ஏனோதானோ என்ற போக்கு இருக்கக்கூடாது.

இந்த விவகாரத்தில் ஒரு கண்ணை மூடிக்கொண்டி ருக்கக்கூடாது என்று அவர் சொன்னார். சில தரப்பினர் கண்களை மூடிக்கொண்டால் இந்தப் பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு பிறக்காது. நாங்கள் யாரையும் குற்றஞ்சாட்டவில்லை. நடப்பதைச் சொல்கிறோம் என்றார் அவர்.

எங்கள் சம்மேளனத்தில் உறுப்பினர்கள் யாராவது அந்நியர்களுக்கு லைசென்சுகளை வாடகைக்கு கொடுத்தாலோ குத்தகைக்குக் கொடுத்தாலோ அதனை நாங்கள் சகித்துக்கொள்ள மாட்டோம் என்றார் அவர்.

சிலரை நாங்கள் கண்டுபிடித்தோம். விசாரித்தபோது அவர்கள் அந்நியர்களைக் குறை சொல்கின்றனர். உள்ளூரைச் சேர்ந்தவர்கள் லைசென்ஸ் பெற்று வியாபாரம் செய்கின்றனர். ஆனால் அந்நியர்கள் லைசென்ஸ் இன்றி சட்டவிரோதமாக வியாபாரம் செய்கின்றனர். பொருட்களையும் அவர்கள் மிக மலிவாக விற்கின்றனர் என்றும் சிலர் முறையிட்டதாக அவர் சொன்னார்.

வியாபாரிகள் இடையே இந்தப் பிரச்சினை மோசமான விளைவை ஏற்படுத்துவதற்கு முன்ன தாகவே இதற்குத் தீர்வு காணப்பட வேண்டும். ஏனெனில் இந்த நிலை தொடர்ந்தால் காலப்போக்கில் பொருளாதாரத்தை அந்நியர்கள் கட்டுப்படுத்தக்கூடும். ஆகவே சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.